DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C.288/2023 |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| Name | : | **திரு.சிலம்பரசன்** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் 1வது எதிரி சிறையில் உள்ளார். 2-ம் எதிரி ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 15.09.2025

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது காரைக்குடி வடக்கு காவல்நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். நான் சிவகங்கை நகர் காவல்நிலையத்தில் முதல்நிலைக் காவலராக பணிபுரிந்த போது கடந்த 26.09.2022 ம் தேதி காலை 6.00 மணியளவில் சிவகங்கை நகர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் திரு. ஜெயபாலன் மற்றும் முநிக ஜெகதீசன், காவலர் 2248 திரு. முத்துக்கிருஷ்ணன் ஆகியோரிடம் சிவகங்கை நகர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் ரோந்து சுற்றி கண்காணித்து வந்தோம்.

2. அப்போது சாமியார்பட்டி விலக்கு ரோட்டில் காலை 7.00 மணியளவில் வடக்கு நோக்கி சந்தேகத்திற்கு இடமாக வந்த TN 11 W 3587 swift dezir

என்ற காரை நிறுத்தி சோதனை செய்தபோது அந்த வாகனத்தில் வழக்கு எதிரிகளான சங்கர் என்ற குட்டை சங்கர் என்ற சங்கரபாண்டியன் மற்றும் கீழவாணியங்குடியை சேர்ந்த ராஜபாண்டியன் மகன் ராக்கேஷ் என்பவரும் இருந்ததை கண்டு அவர்கள் வந்த வாகனத்தை சோதனை செய்ய சார்பு ஆய்வாளர் முற்பட்டபோது வண்யிடிலிருந்து கீழே வாளுடன் இறங்கிய சங்கர் என்ற குட்டை சங்கர் ஏண்டா போலிஸ்கார நாய்களா எங்கள் வண்டியையே நிறுத்தி சோதனை செய்வீர்களா என்று கூறியதோடு உங்களை எல்லாம் கண்ட துண்டமாக வெட்டினால்தான் நான் யாரென்பது தெரியுமென்று சொல்லி சார்பு ஆய்வாளர் ஜெயபாலன் என்பவர்மீது வாளை வீசினார்.

3. சார்பு ஆய்வாளர் ஜெயபாலன் சுதாரித்து கொண்டு விலகிவிட்டார். போலிசார் பார்டியான நாங்கள் எதிரியை குட்டை சங்கர் மற்றும் ராக்கேஷ் என்பவரை மடக்கி பிடிக்க முயற்சித்தபோது குட்டை சங்கர் என்பவர் ராக்கேஷை பார்த்து இவனுகளை காரை ஏற்றி கொல்லுடா என்று கூறினார். காரை எடுக்க முற்பட்ட போது எங்களது போலிசார் பார்ட்டி எதிரிகளை மடக்கி பிடித்து அவர்கள் வந்த வாகனம் மற்றும் வாளை கைப்பற்றி காலை 8.30 மணியளவில் நிலையம் வந்து சார்பு ஆய்வாளர் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**: வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை இல்லை.

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.09.15 05:17:04 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**